2021 செப்டம்பர் 13]

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "2021 ஆம் ஆண்டு பாரதியார் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.
(மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

(இ) தமிழ்நாடு இளநிலை மருத்துவப் படிப்புகளுக்கான சேர்க்கைச் சட்டமுன்வடிவு, 2021

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு இளநிலை மருத்துவப் படிப்புகளுக்கான சேர்க்கைச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீட் என்னும் தேர்வைக் கொண்டு வந்து, மருத்துவக் கல்விக் கனவைச் சிதைத்து வரும் ஒன்றிய அரசுக்கு எதிராக கடந்த நான்காண்டு காலமாகத் தமிழ்நாட்டில் மிகக் கடுமையான போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. மாணவ, மாணவியர் தங்களது விலைமதிக்க முடியாத இன்னுயிரை இந்தப் போராட்டத்துக்குத் தாரைவார்த்து மறைந்து போயிருக்கிறார்கள். தொடக்கத்தில் இருந்தே இந்த நீட் தேர்வை திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்த்து வருகிறது. (குறுக்கீடு)

[*2021 செப்டம்பர் 13*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசும்போது அனைவரும் உட்கார வேண்டும். நீங்கள் உட்காருங்கள்.

(மாண்புமிகு அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர் திரு. கே.பி. முனுசாமி அவர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தார்.)

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: ஏனென்றால் மாணவர்களுக்குக் கல்வித் தடையை ஏற்படுத்தக்கூடிய நுழைவுத் தேர்வுக்கு நிரந்தரமாக முற்றுப்புள்ளி வைத்த அரசுதான், திராவிட முன்னேற்றக் கழக அரசு.

இதன் தொடர்ச்சியாக நீட் தேர்வை இரத்து செய்ய, கழக அரசு அமைந்தவுடன், முதல் சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே சட்டம் இயற்றப்படும் என்று திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தேர்தல் அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறோம். அதை நிறைவேற்றும் வகையில், மருத்துவம், பல் மருத்துவம், இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதி ஆகிய இளநிலை மருத்துவக் கல்விச் சேர்க்கைகளை, இனிமேல் 12 ஆம் வகுப்புத் தேர்வில் பெற்ற மதிப்பெண்களின் அடிப்படையில் நடத்துவதற்கு ஏதுவாக, வலிமையான சட்டமுன்வடிவினை இப்பேரவையில் நான் முன்மொழிகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கழக அரசு பொறுப்பேற்றவுடன் நீட் தேர்வுக்கு எதிரான சட்டப் போராட்டத்தைத் தொடங்கியிருக்கிறோம். ஒன்றிய அரசால் நடத்தப்படும் நீட் தேர்வால் சமுதாயத்தில் பின்தங்கியுள்ள மாணவர்களுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதா என்பதைக் கண்டறிந்து அறிக்கை சமர்ப்பித்திட, ஓய்வு பெற்ற நீதியரசர் டாக்டர் ஏ.கே. இராஜன் தலைமையில் ஒரு குழுவை அமைத்தோம். அரசாணை எண் 283, மருத்துவம், மக்கள் நல்வாழ்வுத் துறை, நாள் 10-6-2021-ன்படி இந்தக் குழு அமைக்கப்பட்டது. இந்தக் குழுவிலே பல்வேறு கல்வியாளர்கள் மற்றும் அதிகாரிகள் இடம்பெற்றிருந்தார்கள். இந்த உயர்மட்டக் குழுவின் ஆய்வு வரம்புகளும் வெளியிடப்பட்டன. பொதுமக்கள் அனைவரிடமிருந்தும் கருத்துகளை இக்குழு கேட்டுப் பெற்றது. மின்னஞ்சல், கடிதங்கள் மற்றும் ஆணையத்தில் வைக்கப்பட்டிருந்த கருத்துக் கேட்புப் பெட்டியில் போடப்பட்ட மனுக்கள் என ஆணையத்துக்குப் பல்லாயிரக்கணக்கானவர்கள் தங்களுடைய கருத்துகளைத் தெரிவித்திருந்தார்கள். இந்த வழிமுறைகளின்

2021 செப்டம்பர் 13] [திரு. மு.க. ஸ்டாலின்]

வாயிலாக 86 ஆயிரத்து 342 பேர்களிடமிருந்து பெறப்பட்ட கருத்துகளை ஆராய்ந்து, தனது விரிவான பரிந்துரைகளை நீதியரசர் ஏ.கே. இராஜன் குழு 14–7–2021 அன்று அரசுக்கு அளித்தது. அந்தப் பரிந்துரைகளில் சமுதாயத்தில் பின்தங்கியோர் மருத்துவக் கல்வியைப் பெறும் கனவிற்கு இடையூறாகவும், சமூகப் பொருளாதாரத்தில் வளமிகுந்த பிரிவினருக்கு சாதகமாகவும் இருந்து, எம்.பி.பி.எஸ். மற்றும் உயர் மருத்துவப் படிப்புகளிலுள்ள பலதரப்பட்ட சமூகப் பிரதிநிதித்துவத்தை நீட் தேர்வானது குறைத்துள்ளது என்று தெரிவித்துள்ளது.

குறிப்பாக, அரசுப் பள்ளியின் மாணவர்கள், பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூபாய் 2.5 இலட்சத்திற்கும் குறைவாகக் கொண்டுள்ளவர்கள், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், பட்டியலினத்தவர் மற்றும் பட்டியலின பழங்குடியினர் போன்ற பிரிவுகளைச் சேர்ந்த வசதி குறைந்தவர்கள் இதனால் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

முற்பகல் 10–25

மேலும், எம்.பி.பி.எஸ். மாணவர்களின் தகுதி அல்லது தரத்தினை நீட் தேர்வு உறுதி செய்வதாகத் தெரியவில்லை எனவும், ஒப்பிடுகையில், குறைந்த செயல்திறன் கொண்ட (தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வு மதிப்பெண்கள் மற்றும் மேனிலை மதிப்பெண்களில்) மாணவர்கள் எம்.பி.பி.எஸ். படிப்பில் சேர்க்கை பெறுவதற்கு மட்டுமே தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வு புகுத்தப்பட்டுள்ளது எனவும் அறிக்கை முடிவுகள் சுட்டிக்காட்டுகின்றன.

ஆகவே, 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிற்சார் கல்வி நிறுவனங்களில் சேர்க்கைச் சட்டத்தை (தமிழ்நாடு சட்டம் 3/2007) போன்றதொரு சட்டத்தை மாநில அரசு நிறைவேற்றி, அதற்காக குடியரசுத் தலைவருடைய ஒப்புதலைப் பெறலாம் என்றும் இந்தக் குழு பரிந்துரை செய்துள்ளது. இந்த உயர்மட்டக் குழு அளித்த விரிவான பரிந்துரைகளைச் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள, தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில் அரசுச் செயலாளர்களைக் கொண்ட குழு ஒன்று 15–7–2021 அன்று அமைக்கப்பட்டது. செயலாளர்கள் குழு, 2007–ல் தமிழ்நாடு அரசால் இயற்றப்பட்ட சட்டத்தைப் போன்று மருத்துவக் கல்விச் சேர்க்கைக்கு நீட் தேர்வினை விலக்குவதற்கான காரணத்தைக் குறிப்பிட்டு சட்டம் இயற்றி, சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல்

[திரு. மு.க. ஸ்டாலின்] [2021 செப்டம்பர் 13

பெற்று, அதற்கு மாண்புமிகு குடியரசுத் தலைவருடைய ஒப்புதல் பெற வேண்டும் என்று தெரிவித்துள்ளது.

நீட் தேர்வானது மருத்துவக் கல்வியின் தரத்தை மேம்படுத்துகிறது என்பதும் தவறானதே. 2017 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்தே அதிக மருத்துவம் மற்றும் பல் மருத்துவக் கல்வி நிறுவனங்களைக் கொண்டுள்ள மாநிலங்களுள் தமிழ்நாடு ஒன்றாக இருந்தது. இந்த நிறுவனங்களிடமிருந்து பட்டம் பெற்ற மருத்துவர்கள் மற்றும் பல் மருத்துவர்கள் மிகவும் திறமை வாய்ந்தவராக விளங்கினர். எனவே, மேல்நிலைப் பள்ளிப் பாடத் திட்டம் போதுமான தரத்தில் இருக்கும் சூழலில், தகுதித் தேர்வின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் சேர்க்கையானது எந்த வகையிலும் கல்வியின் தரத்தை நிர்ணயிக்காது.

மேலும், பள்ளித் தேர்வு மதிப்பெண்கள், நெறிப்படுத்துதல் முறை மூலமாக சரிசெய்யப்பட்டால் அது முறையான, நியாயமான மற்றும் நடுநிலையான சேர்க்கை முறையை வழங்கும். மருத்துவக் கல்விப் படிப்புகளுக்கான சேர்க்கையினை இந்திய அரசியலமைப்பின் ஏழாவது அட்டவணையின் மூன்றாவது பட்டியலில் 25-வது உள்ளீட்டில் காணலாம். எனவே, மாநில அரசானது அதை முறைப்படுத்த தகுதியுடையது. ஆகவே, இன்று என்னால் இந்தச் சட்டமுன்வடிவு அறிமுகப்படுத்தப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தப் புதிய சட்டமுன்வடிவில், மருத்துவ இளநிலைப் படிப்பில் அரசு ஒதுக்கீடு இடங்கள், தனியார் மருத்துவக் கல்லூரிகளில் அரசு ஒதுக்கீடு செய்யும் இடங்கள் ஆகியவற்றிற்கு 12 ஆம் வகுப்புத் தேர்வு மதிப்பெண்கள் அடிப்படையில் மட்டுமே மாணவர் சேர்க்கை நடத்த முன்மொழியப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், அரசுப் பள்ளி மாணவர்களுக்கு 7.5 விழுக்காடு முன்னுரிமை ஒதுக்கீடு செய்யவும் முன்மொழியப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

உயர்மட்டக் குழுவின் பரிந்துரையை கவனமாக பரிசீலித்த பின்பு, சமூகநீதியை உறுதிசெய்யவும், சமத்துவம் மற்றும் சம வாய்ப்புகளை நிலைநிறுத்தவும், பாதிப்பிற்குள்ளாகக்கூடிய மாணவர்களைப் பாதுகாக்கவும், மாநிலத்தில், முக்கியமாக கிராமப் பகுதிகளில், வலுவான சுகாதாரக் கட்டமைப்பை

2021 செப்டம்பர் 13] [திரு. மு.க. ஸ்டாலின்]

உறுதி செய்யவும், பன்னிரெண்டாம் வகுப்புப் பொதுத் தேர்வில் பெற்ற மதிப்பெண்கள் அடிப்படையில் அனைத்து மருத்துவப் படிப்புகளுக்கான சேர்க்கையை மேற்கொள்ள இச்சட்டமுன்வடிவு கொண்டுவரப்பட்டுள்ளது.

எனவே, அனைத்துக் கட்சிகளையும் சேர்ந்த மாமன்ற உறுப்பினர்கள் இந்தச் சட்டமுன்வடிவினை ஒருமனதாக நிறைவேற்றித் தருமாறு அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த நீட் தேர்வால் அரியலூர் மாவட்டத்தைச் சேர்ந்த அனிதா தொடங்கி, ஏராளமான மாணவர்கள் தங்களுடைய உயிரை இழக்கக்கூடிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். நேற்றைக்குக்கூட சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த தனுஷ் என்ற மாணவர் இந்த நீட் தேர்வினால் உயிரிழந்திருக்கிறார். உயிர்க்கொல்லியாக மாறி வரும் நீட் தேர்விலிருந்து நிரந்தர விலக்கு பெறுவதற்கான இந்த மசோதாவை மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒருமனதாக நிறைவேற்றித் தரவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த அரசும் தமிழ்நாட்டில் உள்ள அனைத்துக் கட்சிகளும் நடத்திய சட்டப் போராட்டத்தின் விளைவாக, மருத்துவக் கல்விக்கான அகில இந்திய ஒதுக்கீட்டில் இன்றைக்கு 27 விழுக்காடு இடஒதுக்கீட்டினைப் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தினருக்கு பெற்று வரலாற்றுச் சாதனையை நாம் புரிந்திருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நீட் தேர்வு விவகாரத்திலும் அனைத்துக் கட்சிகளின் சட்டமன்ற உறுப்பினர்களும் முழு ஒத்துழைப்பினை நல்கி, சமூகநீதியில் வரலாறு படைத்திட துணைநிற்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு இளநிலை மருத்துவப் படிப்புகளுக்கான சேர்க்கைச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

[பேரவைத் தலைவர்] [2021 செப்டம்பர் 13

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

முற்பகல் 10–30

(ஈ) தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2021

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

[பேரவைத் தலைவர்] [2021 செப்டம்பர் 13

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2-00

பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

(ஓ) தமிழ்நாடு இளநிலை மருத்துவப் படிப்புகளுக்கான சேர்க்கைச் சட்டமுன்வடிவு, 2021

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு இளநிலை மருத்துவப் படிப்புகளுக்கான சேர்க்கைச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 43/2021), மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு இளநிலை மருத்துவப் படிப்புகளுக்கான சேர்க்கைச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 43/2021)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போதைய தமிழகத்தை ஆளும் திராவிட முன்னேற்றக் கழக அரசு அங்கம் வகித்த காங்கிரஸ் கூட்டணி ஆட்சிக்காலத்தில், மத்திய அரசினால் 21-12-2010-ல் நீட் தேர்வு குறித்து அறிவிப்பு வெளியிடப்பட்டது. அப்போது, திரு. குலாம் நபி ஆசாத் அவர்கள், மத்திய சுகாதாரத் துறை அமைச்சராக இருந்தார். திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய திரு. காந்தி செல்வன் அவர்கள், சுகாதாரத் துறையின் இணை அமைச்சராகப் பொறுப்பு வகித்தார். 2011 ஆம் ஆண்டில் அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்தது முதல் 2016 ஆம் ஆண்டு வரை மாண்புமிகு அம்மா அவர்கள் உச்ச

@ 13-9-2021 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

2021 செப்டம்பர் 13] [திரு. எடப்பாடி K. பழனிசாமி]

நீதிமன்றத்தில் சட்டப் போராட்டம் நடத்தி, தமிழகத்திற்கு நீட் தேர்விலிருந்து விலக்கு பெற்றார்கள். உச்ச நீதிமன்றம், (குறுக்குடு) இது முக்கியமானது. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *எனக்குத் தெரிந்ததைச் சொல்கிறேன். நீங்கள் சொன்னதுதான். அந்தச் சட்டம் வந்தவுடனேயே நீங்களும் ஆதரவு தெரிவித்து மாமன்றத்தில் ஒரு சட்டம் கொண்டு வந்து, ஜனாதிபதி ஒப்புதல் பெற்று, அம்மையார் இருக்கிற வரை, அது இல்லை. அதையும் சேர்த்து பதிவு செய்துவிடுங்கள். (குறுக்கீடு)*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் சொல்வதை நீங்கள் முழுமையாகச் சொல்லியிருக்கிறீர்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை. உங்களுக்காகத்தான் சொன்னேன்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *தயவுசெய்து நீங்கள் நடுநிலையோடு இருக்க வேண்டும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நடுநிலையோடுதான் உங்களுக்காகச் சொல்கிறேன்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர்கள் சொல்கிற பதிலைத்தான் நீங்கள் சொல்கிறீர்கள். நீங்கள் நடுநிலையோடு இருக்க வேண்டும். நீங்களே பதில் சொல்லிவிட்டால் அமைச்சர்களுக்கு வேலையில்லாமல் போய்விடும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *ஒரு gap இருக்கிறது. அதை நிரப்பி விடுங்கள் என்பதற்காகச் சொன்னேன்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உச்ச நீதிமன்றம் 9-5-2016-ல் நீட் தேர்வின் மூலமாகத்தான் மருத்துவ மாணவர்களின் சேர்க்கை நடைபெற வேண்டுமென்று தீர்ப்பளித்துள்ளது. அம்மாவின் அரசால் தமிழகத்திற்கு நீட் தேர்விலிருந்து விலக்கு அளிக்க வேண்டுமென்று 2017 ஆம் ஆண்டு சட்டசபையில் ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, சட்டமுன்வடிவு மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டது. ஆனால், மத்திய அரசு அதற்கான ஒப்புதலை*

[திரு. எடப்பாடி K. பழனிசாமி] [2021 செப்டம்பர் 13

வழங்கவில்லை. மசோதாவிற்கு ஒப்புதல் வரும் வரை 85 விழுக்காடு தமிழகப் பள்ளிகளில் பயின்ற மாணவர்களுக்கும், 15 விழுக்காடு மத்திய–மாநில பள்ளிகளில் படித்த மாணவர்களுக்குமென மக்கள் நல்வாழ்வுத் துறை, G.O. No. 233, நாள் 22–6–2017–ல் அரசாணை வெளியிட்டது. இந்த அரசாணை 14–7–2017 அன்று சென்னை உயர் நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டது. மேலும், உச்ச நீதிமன்றமும் நிராகரித்து உத்தரவு வழங்கியது. இந்தச் சூழ்நிலையில் ஒரு வழக்கறிஞர் குறிப்பிட்டதை நான் இங்கே, இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். 'இனி யாராலும், இந்தியாவில் நீட் தேர்வை ஒழிக்க முடியாது' என்று இதற்காக வாதாடிய வழக்கறிஞர் பேட்டி அளித்துள்ளார். அந்தச் செய்தி எல்லா ஊடகங்களிலும் வந்தது.

Covid 2019–னைத் தொடர்ந்து தேசிய நுழைவு மற்றும் தகுதித் தேர்வினை 2020–2021 ஆம் கல்வியாண்டிற்கு இரத்து செய்து, 12 ஆம் வகுப்பில் பெற்ற மதிப்பெண் அடிப்படையில் மருத்துவம் மற்றும் பல் மருத்துவம் சேர்க்கையினைக் கொண்டு வரும் வகையில் மருத்துவக் கழகச் சட்டம், 1956 மற்றும் பல் மருத்துவச் சட்டம், 1948 மற்றும் அதனுடன் தொடர்புடைய இதரச் சட்டங்களில் தொடர்புடைய பிரிவுகளில் உரிய திருத்தங்களை மேற்கொள்ள ஓர் அவசரச் சட்டத்தினை உருவாக்கித் தர வேண்டி மாண்புமிகு பாரதப் பிரதமர் மற்றும் மாண்புமிகு மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் அவர்களுக்கு என் தலைமையிலான அம்மாவின் அரசு 8–7–2018 அன்று கடிதம் அனுப்பியது. மேலும், 25–8–2020–ல் நடைபெற்ற மாநில சுகாதாரத் துறையின் செயலாளர்களுக்கான காணொளி கூட்டத்தின்மூலம் தமிழக அரசின் மேற்கூறிய நிலைப்பாடு மீண்டும் எடுத்துரைக்கப்பட்டது. 2016–ல் நீட் தேர்விலிருந்து ஓராண்டுக்காலம் விலக்கு கேட்டு அனுமதி பெற்றார் மாண்புமிகு அம்மா அவர்கள். அதனைத் தொடர்ந்து தமிழ்நாட்டிற்கு நீட் தேர்விலிருந்து நிரந்தர விலக்கு கேட்டு மத்திய அரசிடம், அம்மாவின் அரசு தொடர்ந்து வலியுறுத்தி வந்தது.

பிற்பகல் 2–05

2019–ல் மருத்துவம் பயில, அரசுப் பள்ளிகளில் பயின்ற வெறும் ஆறு மாணவர்கள் மட்டுமே தேர்வு பெற்றனர். இந்த நிலையை மாற்றிட வேண்டுமென்று அம்மாவின் அரசு உறுதிபூண்டது. அன்றையதினம் எதிர்க்கட்சித் தலைவர்களும், எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களும் கோரிக்கை வைக்கவில்லை.

2021 செப்டம்பர் 13] [திரு. எடப்பாடி K. பழனிசாமி]

பொது மக்களும் கோரிக்கை வைக்கவில்லை. இந்தநிலையில், அரசுப் பள்ளிகளில் படித்த மாணவர்களுக்கு 7.5 சதவிகிதம் உள்ஒதுக்கீடு சட்டமுன்வடிவை அம்மா அவர்களின் அரசு கொண்டுவந்து நிறைவேற்றி அதனை அமல்படுத்தியது. (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் ஏழையெளிய, ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட சுமார் 435 மாணவர்களின் மருத்துவராகும் கனவு இன்றைக்கு நனவாக்கப்பட்டுள்ளது. பல் மருத்துவர்கள் ஆகும் கனவும் நனவாக்கப்பட்டிருக்கின்றது. அதுமட்டுமல்லாமல், அவர்களின் மருத்துவக் கல்விக் கட்டணத்தை அரசாங்கமே ஏற்றுக்கொண்டிருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) நீட் தேர்வை அம்மா அவர்களின் அரசு கடுமையாக எதிர்த்த போதிலும், தமிழக அரசுப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களைத் தயார்படுத்தும் வகையில் பாடத் திட்டத்தினை மாற்றியமைத்ததோடு, மாவட்டந்தோறும் சிறந்த வல்லுநர்களைக் கொண்டு நீட் தேர்வுக்கு சிறப்புப் பயிற்சிகள் அளிக்கப்பட்டு நம்முடைய மாணவர்கள் நீட் தேர்விலே கலந்துகொண்டு போட்டித் தேர்வில் அதிக மதிப்பெண்களைப் பெற்று இன்றைக்கு மருத்துவர்களாக, பல் மருத்துவர்களாக வருவதற்கு அம்மா அவர்களின் அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதுபோல், 2011 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி முடிவுக்கு வந்தபோது 1,945 பேர்களுக்குத்தான், இடம் அன்றையதினம் இருந்தது. மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு தொடர்ந்து நடவடிக்கை எடுத்த காரணத்தினாலே 11 புதிய மருத்துவக் கல்லூரிகள் துவக்கப்பட்டன. அத்தோடு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருந்தபோதும் பல மருத்துவக் கல்லூரிகளைத் துவக்கினார்கள். மருத்துவக் கல்லூரிகளில் இடங்கள் அதிகரிக்கப்பட்டன. அதன்மூலமாக சுமார் 5,200 இடங்களில் இன்றைக்கு மருத்துவ மாணவர்கள் சேர்ந்து படிக்கின்ற வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. கடந்த பத்தாண்டு காலத்தில் 2011-லிருந்து 2021 வரை மாண்புமிகு அம்மா அவர்கள் அரசு எடுத்த நடவடிக்கைகளின் காரணமாக சுமார் 3,255 பேர் புதிதாக மருத்துவம் மற்றும் பல் மருத்துவப் படிப்பில் சேர்ந்து படிக்கும் வாய்ப்பை மாண்புமிகு அம்மா அவர்கள் அரசு உருவாக்கித் தந்துள்ளது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தற்போதைய திராவிட முன்னேற்றக் கழக அரசு, ஓய்வுபெற்ற நீதியரசர் திரு. ஏ.கே. ராஜன் அவர்கள் தலைமையில் நீட் தேர்வினால் ஏற்படக்கூடிய பின் விளைவுகள் குறித்து அறிய

[திரு. எடப்பாடி K. பழனிசாமி] [2021 செப்டம்பர் 13

அமைத்த குழு உச்ச நீதிமன்றத்தின் வரம்புக்கு எதிராக அமைக்கப்பட்டுள்ளது என்று சென்னை உயர் நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கிற்கு பதில் மனு தாக்கல் செய்த திராவிட முன்னேற்றக் கழக அரசு, நீட் தேர்வினால் ஏற்படும் பாதிப்புகளைப் பற்றி மட்டுமே இந்தக் குழு ஆராயும் என்றும், இந்தக் குழுவின் பரிந்துரை நீட் தேர்வு நடைபெறுவதற்கு எந்தவிதமான இடையூறும், பாதிப்பும் ஏற்படுத்தாது என்றும், உச்ச நீதிமன்ற உத்தரவுக்கு முரணாகவோ, மத்திய அரசின் சட்டங்களுக்கு எதிராகவோ இந்தக் குழு அமைக்கப்படவில்லை என்றும் உயர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

மேலும், இது அரசின் கொள்கை முடிவு, இதற்கு எதிராக யாரும் மனு தாக்கல் செய்யமுடியாது என்றும், இந்தக் குழு அமைக்கப்பட்டதால், அந்த மனுதாரர் எந்தவிதத்திலும் பாதிக்கப்படவில்லை என்றும் தெரிவித்து, மாண்புமிகு உயர் நீதிமன்ற நீதிபதிகள் அளித்த 14 பக்கத் தீர்ப்பில், இந்த அரசு தாக்கல் செய்த பிரமாணப் பத்திரத்தில் உள்ள வாசகங்களை அப்படியே குறிப்பிட்டு, குழு அமைத்தது அரசின் கொள்கை முடிவு என்பதற்காக இந்த மனுவை தள்ளுபடி செய்கிறோம் என்றும் கூறியுள்ளது. இதுதவிர, இந்தக் குழு நீட் தேர்வை இரத்து செய்ய அமைக்கப்பட்டுள்ளது என்று எந்த இடத்திலும் குறிப்பிடப்படவில்லை. ஓய்வுபெற்ற நீதியரசர் மரியாதைக்குரிய திரு. ஏ.கே. ராஜன் குழுவின் பரிந்துரையைச் செயல்படுத்துவதன்மூலம் நீட் தேர்வு இரத்து செய்யப்படும் என்று உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த பதில் மனுவில் தி.மு.க. அரசு குறிப்பிடவில்லை.

நான் நீட் தேர்வு குறித்து, காலையில், அவசர முக்கியத்துவம், வாய்ந்த ஒரு நிகழ்வில் பேசும்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சில கருத்துகளைத் தெரிவித்தார். இன்று நீட் சம்பந்தமாக சட்டமன்றத்தில் தீர்மானம் ஒன்றை அரசு தாக்கல் செய்யவுள்ளதாகவும், அப்போது நீங்கள் கொண்டுவந்த இலட்சணத்தைப் பாருங்கள். நாங்கள் கொண்டுவரும் சட்டமுன்வடிவைப் பாருங்கள் என்று கூறினார். நீங்கள் கொண்டுவந்த இலட்சணத்தையும் நாங்கள் பார்த்தோம். நாங்கள் கொண்டுவந்த அதே சட்டமுன்வடிவு. (மேசையைத் தட்டும் ஒலி) List-III இல் entry 25 என்ற பிரிவின்கீழ்தான் இச்சட்டமுன்வடிவையும் கொண்டுவந்துள்ளீர்கள். கூடுதலாக ஓய்வுபெற்ற நீதியரசர் ராஜன் கமிட்டியின் பரிந்துரை பற்றி குறிப்பிட்டுள்ளீர்கள். நேற்று மத்திய

2021 செப்டம்பர் 13] [திரு. எடப்பாடி K. பழனிசாமி]

அரசு கொண்டுவந்த சட்டத்தை எதிர்த்து மாநில அரசு சட்டம் இயற்றமுடியுமா? இது ஒரு கேள்விக்குறியாக உள்ளது. பல்வேறு வழக்கறிஞர்கள் கருத்து தெரிவித்திருக்கிறார்கள். இதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெளிவுபடுத்த வேண்டும். ஏற்கெனவே உச்ச நீதிமன்றம் நீட் சம்பந்தமான தீர்ப்பையும் வழங்கியுள்ளது என்பதையும் அவையினுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். தமிழ்நாட்டு மக்களின் நன்மைக்காக, முன்னேற்றத்திற்காக அரசு கொண்டுவரும் நல்ல பல சட்டங்களை அம்மாவினுடைய அரசு வரவேற்கும். அதனால், தற்போது நீட் சம்பந்தமாக இந்த அரசு கொண்டுவரும் சட்டமுன்வடிவை வரவேற்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீட் தேர்வு குறித்து கொண்டுவந்துள்ள அரசின் தீர்மானத்தை வரவேற்று அமர்ந்துள்ளீர்கள். நன்றி. நன்றி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீட் சம்பந்தமாகக் கொண்டுவந்துள்ள இந்த மசோதாவினை வரவேற்பதாக நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். உள்ளபடியே அதற்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்கெனவே, ஜல்லிக்கட்டு தீர்மானம் வந்தபோதும் தி.மு.க. எதிர்க்கட்சியாக இருந்தாலும், அரசியல் பார்க்காமல் நாங்களும் ஆதரித்தோம் என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல 'நீட்' தேர்வு தொடர்பாக கடந்த ஆட்சியில் தீர்மானம் கொண்டுவரப்பட்டபோது எதிர்க்கட்சியாக இருந்த தி.மு.க. அப்போதே வரவேற்றிருக்கிறது. நீங்கள் வெளிநடப்பு செய்த நேரத்திலே, இந்த நீட் பிரச்சினை தொடர்பாக நான் பேச ஆரம்பித்தேன். அப்போது நீங்கள் வெளிநடப்பு செய்த காரணத்தினாலே, இங்கேயிருந்து நீங்கள் கேட்க முடியாவிட்டாலும், நான் என்ன பேசினேன் என்பதை வெளியிலே போய் கேட்டுத் தெரிந்துகொண்டீர்கள். அதற்கும் மகிழ்ச்சி; என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 2–10

நான் கேட்கிற ஒரே கேள்வி, நீட் பிரச்சினையைப் பொறுத்தவரைக்கும், இந்தச் சட்டமன்றத்திலே இரண்டு

[திரு. மு.க. ஸ்டாலின்] [2021 செப்டம்பர் 13

மசோதாக்களை நிறைவேற்றி, அரசின் மூலமாக நாம் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்தோம். அதை அவர்கள் அப்போது திருப்பியனுப்பி இரண்டு வருடங்கள் ஆகிவிட்டன. ஆனால், அந்தத் தகவலை ஏன் சட்டமன்றத்திலே அன்றைக்கு இருந்த அ.தி.மு.க. ஆட்சி சொல்லவில்லை? (மேசையைத் தட்டும் ஒலி) என்பதுதான் என்னுடைய கேள்வி. இருந்தாலும் அதைப்பற்றியெல்லாம் பேசி, பிரச்சினையை உருவாக்குவதற்கு நான் தயாராக இல்லை. ஏனென்றால், மாணவர்கள் ஒவ்வொரு வருடமும் தற்கொலை செய்து கொண்டு மாளக்கூடிய ஒரு கொடுமை நடந்து கொண்டிருக்கிறது. அதைத் தடுத்து நிறுத்துவதற்காக நல்ல நோக்கத்தோடு ஒருங்கிணைந்து இந்த அவையில் இருக்கக்கூடிய எல்லாக் கட்சிகளும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையிலே, இந்தத் தீர்மானத்தை நீங்கள் தயவுகூர்ந்து, வரவேற்று இதை நிறைவேற்றித் தர வேண்டுமென்று மீண்டும் கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை அவர்கள், சுருக்கமாக ஒரு வரியில் சொல்லுங்கள்.

திரு. கு. செல்வபெருந்தகை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை எப்படி சுருக்கமாகச் சொல்ல முடியும்? அவர் ஏற்கெனவே சொல்லியிருக்கிறார். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவுசெய்து, நான் சொல்கின்றேன, NEET-ஐப் பற்றி நிறைய பதிவுகள் இருக்கின்றன.

திரு. கு. செல்வபெருந்தகை: ஒரு நிமிடம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதனால் சுருக்கமாகச் சொல்லுங்கள்.

திரு. கு. செல்வபெருந்தகை: 'காங்கிரஸ் அரசாங்கத்தால் இது கொண்டு வரப்பட்டது; காந்தி செல்வனில் ஆரம்பித்து, குலாம் நபி ஆசாத் வரைக்கும்' சொல்லி முடித்திருக்கிறார். இந்த அவையில் இது யாரால் கொண்டுவரப்பட்டது; எப்படி கொண்டு வரப்பட்டது; யாருக்கு எதிராக கொண்டு வரப்பட்டது; என்பதை நாங்கள் பதிவு செய்ய கடமைப்பட்டிருக்கின்றோம். ஆகையால், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், சிறிது மணித் துளிகள். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சுருக்கமாகச் சொல்லுங்கள்.

2021 செப்டம்பர் 13]

திரு. கு. செல்வபெருந்தகை: *நான் சுருக்கமாகச் சொல்கின்றேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் அரசு எப்படியிருக்க வேண்டுமென்றால், ஆங்கிலேய பேராசிரியர் சொல்கின்றார். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் அதன் உள்ளுக்குள்ளே போகாதீர்கள்.*

திரு. கு. செல்வபெருந்தகை: *சரி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களே, 'மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், வரவேற்கிறேன் என்று, சொல்லிவிட்ட பிறகு, மீண்டும் அதற்குள் நுழைந்து விவகாரத்தை நான் வளர்க்க விரும்பவில்லை. நல்ல முடிவோடு நிறைவேற்றித் தாருங்கள்' என்று கேட்டார்கள். ஆனால், நீங்கள் இப்போது மீண்டும் அதையே திரும்ப யாரால் கொண்டு வரப்பட்டது என்று கேட்டால், அதற்குப் பதில் சொல்வார்கள். மீண்டும் பிரச்சினை வரும். ஒரு சுமூக முடிவு வரும்போது, நீங்கள் யார் கொண்டு வந்தார்கள் என்று பேசி, என்ன ஆகப் போகிறது இப்போது? ஒன்றுமில்லை; ஆகையால், நீங்களும் சேர்ந்து ஆதரியுங்கள், அவ்வளவுதான்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதை ஆதரிக்கிறேன் என்று மட்டும் சொல்லுங்கள். இது வரவேற்கத்தக்க விஷயம்.*

திரு. கு. செல்வபெருந்தகை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் ஆதரிக்கின்றோம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *ஆளுங்கட்சி, பிரதான எதிர்க்கட்சி இரண்டும். . .*

திரு. கு. செல்வபெருந்தகை: *நாங்கள் ஆதரிக்கின்றோம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நன்றி.*

திரு. கு. செல்வபெருந்தகை: *அவர் ஒரு குற்றச்சாட்டு வைத்திருக்கிறார். அந்தக் குற்றச்சாட்டிற்குப் பதில் சொல்ல வேண்டாமா! இந்த அவையில் அந்தக் குற்றச்சாட்டு பதியப்பட்டிருக்கின்றது. நான் சொல்கின்றேன். . .*

[*2021 செப்டம்பர் 13*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், ஒன்றைக் கேட்டுவிட்டு பேசுங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே குற்றச்சாட்டுக்குப் பதில் சொல்லவில்லை. அதில் பேசவேண்டுமென்றால் 100 விஷயங்கள் பேசலாம். எல்லோருக்கும் தெரியும். உங்களுக்கு மட்டுமில்லை. இந்த அவையில் நிறைய பேருக்குத் தெரியும். அதனால் தயவுசெய்து, காலத்தின் அருமையைக் கருதி, ஆளுங்கட்சியும், பிரதான எதிர்க்கட்சியும் வரவேற்ற ஒரு தீர்மானத்தை, வரவேற்கிறேன் என்று சொல்லி முடியுங்கள். நீங்கள் பண்பாகப் பேசுபவர்; அவ்வாறு பேசி முடியுங்கள்.

திரு. கு. செல்வபெருந்தகை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் இதை வரவேற்கிறோம். அதில் மாற்றுக் கருத்து எங்களுக்கு இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதோடு முடியுங்கள்.

திரு. கு. செல்வபெருந்தகை: ஆனால், அவர் என்ன சொல்லியிருக்கிறார் என்றால், முன்னாள் மத்திய அமைச்சர் குலாம் நபி ஆசாத். குலாம் நபி ஆசாத், எங்கே வந்தார் இங்கே? காந்தி செல்வன் எங்கே வந்தார்? அதைச் சொல்ல வேண்டாமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் உட்காருங்கள். உட்காருங்கள் ஒரு நிமிடம். நான் சொல்கிறேன். நம்முடைய UPA Government-ல் வந்தது என்று சொல்கிறார்கள். அதில் ஒன்றும் தவறு கிடையாது. Introduce செய்தார்கள். இப்போது பாருங்கள், நானே உங்களுக்குப் பதில் சொல்கிறேன். அதாவது, இதே அவையில் எல்லோருமாகச் சேர்ந்து ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி, கலைஞர் இருக்கும்போது ஜனாதிபதி ஒப்புதல் பெற்றுதான் அது இவ்வளவு நாள் நடந்தது. இப்பொழுது அந்தச் சட்டத்தைக்கூட உச்ச நீதிமன்றத்தில் கேட்கும்போது சொல்லவில்லை என்பதுதான் பிரச்சினை. அதுகூட உங்களுக்குத் தெரியும். நீங்கள் இதோடு முடித்துவிடுங்கள். ஒரு நிமிடத்தில் முடியுங்கள்.

திரு. கு. செல்வபெருந்தகை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுத் தவறுகளை இந்த அவையில் பதிவு செய்யக்கூடாது. காங்கிரஸ் அரசு எங்கே கொண்டு வந்தது? அதைத்தான் நான் கேட்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சொல்லியாகிவிட்டது.

2021 செப்டம்பர் 13]

திரு. கு. செல்வபெருந்தகை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களுக்குத் தெரியவில்லை. தெரியப்படுத்த வேண்டாமா! சட்டம்—நான் என்ன சொல்கிறேன்,. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், இங்கே கேளுங்கள். உங்களுக்கு நிறைய தெரியும்.* UPA Government-*ல்* introduce *செய்தார்கள் என்று சொன்னதிலே என்னவாகிவிட்டது, அது வந்தது இல்லையா! (குறுக்கீடு) விட்டுவிடுங்கள். நீங்கள் அடுத்ததற்கு வாருங்கள். (குறுக்கீடு) பேசுங்கள், பதிவு செய்யுங்கள்.*

திரு. கு. செல்வபெருந்தகை: *நான் பதிவு செய்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சுருக்கமாக முடியுங்கள்.*

திரு. கு. செல்வபெருந்தகை: *இந்திய மருத்துவக் கழகம் என்பது* autonomous body. *இங்கே எப்படி* Bar Council of India *இருக்கிறதோ, அதேமாதிரி, ஒரு* autonomous body. *காங்கிரஸ் பேரரசு அப்போது சொன்னால், கேட்க வேண்டிய நிலையில் அவர்கள் இல்லை. எங்கே காங்கிரஸ் பேரியக்கம் சொன்னது?*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சரி, அதைப் பதிவு செய்யுங்கள்.*

திரு. கு. செல்வபெருந்தகை: *காங்கிரஸ் அரசும், திராவிட முன்னேற்றக் கழகமும் ஆட்சியில் இருக்கும்போது பரிந்துரை வழங்கலாம். ஆணை வழங்கமுடியாது. இதுதான்* autonomous body*-க்கும் அரசாங்கத்திற்கும் உள்ள வித்தியாசம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நன்றி, நீங்கள் பதிவு செய்துவிட்டீர்கள். நன்றி, நன்றி, நன்றி, வரவேற்று அமருங்கள். அடுத்தது. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள். (குறுக்கீடு) சொல்லுங்கள். (குறுக்கீடு) போதும், போதும். நிறைய பேசலாம். (குறுக்கீடு) உங்களுக்கு எவ்வளவு விஷயங்கள் தெரியும் என்று எனக்குத் தெரியும். இதில் ஒரு மணி நேரத்திற்கு பேசுவதற்கு உங்களிடம்* subject *இருக்கிறது. (குறுக்கீடு) சரி, ஒரு வரியில் முடியுங்கள். ஒரு வரியில் முடியுங்கள்.*

பிற்பகல் 2-15

திரு. கு. செல்வபெருந்தகை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவையின் மணித்துளிகளை நான் வீணாக்க மாட்டேன் என்பதை நீங்கள் நன்கு அறிந்தவர்கள். 2016 ஆம்*

[திரு. கு. செல்வபெருந்தகை] [2021 செப்டம்பர் 13 ஆண்டு தேர்தலில் பாளையங்கோட்டையில் அம்மையார் ஜெயலலிதா அவர்கள் என்ன பேசினார்கள்? எங்கள் இயக்கம் இருக்கும்வரை NEET தேர்வை உள்ளே வர விடமாட்டோம் என்று சொன்னார்களே? (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்த அம்மையார் (குறுக்கீடு) அதற்கடுத்து பேசுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள். (குறுக்கீடு) போதும். தாராளமாக, நிறைய பேசியாகிவிட்டது. போதும். (குறுக்கீடு) சரி ஒரு வரியில் பதிவு செய்யுங்கள். (குறுக்கீடு) பதிவு செய்யுங்கள்.

திரு. கு. செல்வபெருந்தகை: இதுவரை 13 பிள்ளைகள் இறந்திருக்கிறார்கள். நேற்றைக்கு ஒரு பிள்ளை இறந்திருக்கிறான். இதற்கெல்லாம் யார் காரணம்? யார் பொறுப்பேற்பது? அதைப்பற்றிச் சொல்ல வேண்டுமல்லவா? (குறுக்கீடு) இவர்கள் சொல்லிக்கொண்டே இருக்கிறார்கள். என்னைப் பேச விடவேண்டுமல்லவா? (குறுக்கீடு) என்னைப் பேச விட்டால்தான் என்னால் சொல்ல முடியும். Please.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், இது தேவையில்லை. இந்தச் சட்டமுன்வடிவை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கிறார்கள். பிரதான எதிர்க்கட்சியினர் இதை வரவேற்றிருக்கிறார்கள். அதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் ஏற்றுக்கொண்டுவிட்டார்கள். நீங்களும் இதை வரவேற்பதாக நான் பதிவு செய்துகொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள். (குறுக்கீடுகள்) இதை முடித்துவிட்டு கடைசியாக வாய்ப்பு தருகிறேன். (குறுக்கீடு) நான் இதை முடித்துவிட்டு பின்னர் அனைத்தையும் சொல்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. செல்வபெருந்தகை, இதை வரவேற்று அமருங்கள். (குறுக்கீடு) சரி வரவேற்று அமருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் எல்லோரும் என்னைப் பார்த்துப் பேசுங்கள். திரு. செல்வபெருந்தகை, பேசுங்கள்.

திரு. கு. செல்வபெருந்தகை: நான் என்ன சொல்கிறேன் என்றால், இந்தக் குழந்தைகளின் உயிரிழப்பிற்கு, தற்கொலைக்கு யார் பொறுப்பேற்பது? நான் அதைப் பதிவு செய்ய வேண்டாமா? அதைச் சொல்ல வேண்டும். அதைப்பற்றிப் பதிவு செய்ய வேண்டும். (குறுக்கீடு) நீலிக்கண்ணீர் வடிக்கக் கூடாது.

2021 செப்டம்பர் 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திரு. செல்வபெருந்தகை அவர்கள் ஒரு பிரச்சினையை எழுப்பியிருக்கிறார்கள். அது தேவையா, தேவையில்லையா என்பதைப் பற்றிக்கூட நான் பேச விரும்பவில்லை. ஆகவே, நல்ல நோக்கத்திற்காக இந்தத் தீர்மானம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அவர்கள் தற்கொலை செய்துகொண்டதற்கு யார் காரணம்? அவரவர்கள் மனசாட்சிக்கு நன்றாகத் தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, அதை விவாதித்துக்கொண்டிருந்தால், இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுவதில் பல சங்கடங்கள் இருக்கின்றன, சச்சரவுகள் இருக்கின்றன என்ற ஒரு கெட்ட பெயர் நம்முடைய அரசுக்கு வந்துவிடும். இங்கிருக்கக்கூடிய உறுப்பினர்களுக்கும் வந்துவிடும். எனவே, நான் அருள்கூர்ந்து கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பல குற்றச்சாட்டுகளையெல்லாம் சொன்னார்கள். ஆனால், அந்தக் குற்றச்சாட்டுகளுக்கெல்லாம், அவர்கள் வெளிநடப்பு செய்திருந்தபோது நானே விளக்கம் சொல்லிவிட்டேன். அதனால்தான், இப்போது நான் அதைப்பற்றி மீண்டும் விளக்க விரும்பவில்லை. அதனால், அதே அடிப்படையில் நான் திரு. செல்வபெருந்தகை அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புவது, இந்தத் தீர்மானத்தை ஒருமனதாக நிறைவேற்றுவதில் சச்சரவுகளை ஏற்படுத்தி, பல குழப்பங்களை ஏற்படுத்த வேண்டாம் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள். (குறுக்கீடு) வரவேற்கிறீர்கள்தானே? அந்த* bill *கொண்டுவரும்போது அதை எதிர்க்கவில்லையே!*

திரு. நயினார் நாகேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த* bill*-ஐக் கொண்டுவந்தபோது நான் அறிமுக நிலையிலேயே எதிர்க்க வேண்டுமென்று எழுந்திருந்து, பலமுறை வாய்ப்பு கேட்டு நின்று பார்த்தேன். எனக்கு கொஞ்சமும் நேரம் ஒதுக்கித் தரவில்லை. முன் வரிசையில் அமர்ந்திருக்கும் எல்லா மாண்புமிகு அமைச்சர்களும் இதற்கு சாட்சி.*

[*2021 செப்டம்பர் 13*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நான் அதற்காகச் சொல்லவில்லை.* NEET *தேர்வு தேவையில்லை என்று தமிழ்நாட்டில் பாரதிய ஜனதா கட்சி ஒரு* stand *எடுப்பீர்கள். ஏனெனில், காவேரி பிரச்சினையில் கர்நாடக மாநிலத்தில் ஒரு* stand *இருக்கும்; தமிழகத்தில் ஒரு* stand *இருக்கும். அதில் ஒன்றும் தவறு இல்லையே! வரவேற்று அமருங்கள்.*

திரு. நயினார் நாகேந்திரன்: *நான் சொல்வதை மட்டும் பதிவு செய்யுங்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கண்டிப்பாகப் பதிவு செய்யப்படும். பேசுங்கள்.*

திரு. நயினார் நாகேந்திரன்: *21-12-2010 அன்று மத்தியில் காங்கிரஸ் கட்சியும், திராவிட முன்னேற்றக் கழகமும் இருந்தது.* (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க, இந்தச் சட்டமுன்வடிவை வரவேற்கிறேன் அல்லது எதிர்க்கிறேன், இரண்டே வார்த்தையில் சொல்லுங்கள்.* (குறுக்கீடு) *வரவேற்கிறீர்கள் அல்லவா?*

திரு. நயினார் நாகேந்திரன்: *இரண்டு நிமிடங்களில் நான் பேச வந்த கருத்தைப் பதிவு செய்துவிடுகிறேன். நான் பேச வந்த கருத்தைச் சொல்லிவிடுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: NEET *தேர்வு தமிழ்நாட்டிற்குத் தேவையா, தேவையில்லையா? நம்முடைய பிரதான எதிர்க்கட்சி, உங்களுடைய கூட்டணிக் கட்சி, முக்கியமான கட்சி, தமிழ்நாட்டில் உங்கள் கட்சியையும் சேர்த்து தலைமை தாங்கிய கட்சி இதை வரவேற்றிருக்கிறது. நீங்களும் ஒரு முடிவெடுங்கள்.*

திரு. நயினார் நாகேந்திரன்: *கூட்டணிக் கட்சியின் முடிவு வேறு; எங்கள் கட்சியின் முடிவு வேறு. அதாவது,* NEET *தேர்வை 2010 ஆம் ஆண்டு காங்கிரஸ். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2010 ஆம் ஆண்டிலிருந்து வேண்டாம். தற்போது 2021. 11 வருடங்கள் ஆகிவிட்டன. தற்போதைய விஷயத்தை மட்டும் சொல்லுங்கள்.* (குறுக்கீடு) *இதை மட்டும் சொல்லுங்கள்,* please.

2021 செப்டம்பர் 13]

திரு. நயினார் நாகேந்திரன்: நான் சொல்லிவிடுகிறேன். NEET தேர்வு வேண்டாம் என்று தற்போது ஒரு தீர்மானம் கொண்டுவந்திருக்கிறீர்கள். தமிழ்நாடு அரசாங்கத்தில் பணிபுரியும் பணியாளர்களுக்கு Group 1 முதல் 8 வரை, TNPSC-மூலம் தேர்வு எழுதவைக்கிறீர்கள். மாவட்ட ஆட்சித் தலைவராக வருவதற்கு IAS தகுதித் தேர்வு இருக்கிறது. மாவட்டத்தில் சட்டம்-ஒழுங்கு சரியாக. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் அதைப் புரிந்துகொண்டுவிட்டேன். நீங்கள் முன்னாள் அமைச்சராக இருந்தவர்கள். உங்களுக்கு நிறைய விஷயங்கள் தெரியும். நான் அதை understand செய்துகொண்டுவிட்டேன். (குறுக்கீடு) அதாவது, 12 வருடங்கள் படித்துவிட்டு, +2 மதிப்பெண் அடிப்படையில்தான் மாணவர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்றுதான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அது சரியா, தவறா என்று சொல்லி அமருங்கள். Please.

பிற்பகல் 2-20

திரு. நயினார் நாகேந்திரன்: நான் சொல்லிவிட்டு முடிவில் சொல்கிறேன். இரண்டு நிமிடங்கள் time கொடுங்கள். அதாவது, . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் மிகவும் பின்னுக்குப் போகாதீர்கள்.

திரு. நயினார் நாகேந்திரன்: NEET தேர்விற்கு முன்னர் தமிழ்நாட்டில் தேர்ச்சி பெற்றவர்களுடைய விகிதாச்சாரம் வெறும் 50 percent-தான். NEET வந்ததற்குப் பிறகு Human physiology, Biochemistry, Anatomy படித்தவர்கள் 85 சதவிகிதம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நன்றி, நன்றி. புள்ளிவிவரங்களை நீங்கள் நன்றாக படித்திருக்கிறீர்கள். 12 வருடங்கள் படித்து, 12-வது வகுப்பு தேர்வு எழுதிய mark தேவையா? தேவையில்லையா?

திரு. நயினார் நாகேந்திரன்: NEET ஒரு தகுதித் தேர்வு. இதனால் நமக்கு நிறைய benefits இருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், உரையை முடித்துவிடுங்கள்.

[*2021 செப்டம்பர் 13*

திரு. நயினார் நாகேந்திரன்: *நான் சொல்வதைக் கேளுங்கள். அதாவது, கடந்த வருடம் (குறுக்கீடு) அக்டோபர் 20 ஆம் தேதி. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தமாதிரி புள்ளிவிவரங்களை எல்லாம் சொல்லும்போது, ஏதாவது ஓர் ஆதாரத்தோடு, ஓர் அறிக்கை-*report *எதையாவது சொல்லி கொடுக்கவேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) இரண்டாவது,* UPSC*-யிலும் சரி,* TNPSC*-யிலும் சரி, தேர்வுக்குப் பிறகு* interview *வைத்து பல வகைகளில்* mark *கொடுத்து, அதன்பிறகு தேர்ந்தெடுக்கின்றோம். அதனால், அதை ஒப்பிட்டுப் பார்ப்பது சரியில்லை என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இந்தச் சட்டமுன்வடிவை வரவேற்று அமருங்கள்,* please.

திரு. நயினார் நாகேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு அகில இந்திய அளவில்* NEET *தேர்வு எழுதியவர்கள் மொத்தம் 13,66,945 பேர். அதில், 7,71,500 பேர் தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள். தமிழ்நாட்டில் மட்டும் 99,610 பேர்* NEET *தேர்வு எழுதியிருக்கிறார்கள். அதில் வெற்றி பெற்றவர்கள் 57,219 பேர். ஆகவே, தேர்ச்சி விகிதம் நாளுக்குநாள் கூடிக்கொண்டுதான் இருக்கின்றது. அதுமட்டுமல்ல, . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மக்கள்தொகை கூடும். படிக்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை கூடிக்கொண்டிருக்கிறது. நீங்கள் பேசியது போதும். மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர், நீங்களும் சுருக்கமாகச் சொல்லுங்கள்.*

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தமாதிரி புள்ளிவிவரங்களை எல்லாம் கொடுக்கும்போது கூடுதலாக உறுப்பினர் என்ன சொல்லவேண்டுமென்றால், எத்தனை பேர்* fees *கட்டி பயிற்சி எடுத்தார்கள்; எத்தனைபேர் இரண்டு வருடங்கள், மூன்று வருடங்கள் திரும்பத் திரும்ப பயிற்சி எடுத்து எழுதினார்கள்; எத்தனை ஏழை, எளிய மக்களுக்கு வாய்ப்பு கிடைத்தது என்கிற அடிப்படைகளை*

2021 செப்டம்பர் 13] [முனைவர் பழனிவேல் தியாக ராஜன்]

எல்லாம் சொல்லிவிட்டு, புள்ளிவிவரங்கள் சொல்லவேண்டும். பொத்தாம்பொதுவாக, நிறைய அதிகரித்துக்கொண்டிருக்கிறது என்று நீங்கள் சொன்னால், அது சரியாகாது என்று நான் கூறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சொன்னார்கள் என்று நீங்கள் சொல்ல ஆரம்பித்துவிடாதீர்கள். சுருக்கமாக மட்டும் சொல்லுங்கள். ஆதரிக்கிறீர்களா, எதிர்க்கிறீர்களா என்பதை மட்டும் சொல்லச் சொல்லுங்கள். எவ்வளவு நல்லவர் நீங்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், தமிழ்நாட்டின் நலன் கருதி உங்கள் கருத்தைச் சொல்லுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, NEET தேர்வில் எத்தனைபேர் தேர்ச்சி பெற்றார்கள், எத்தனைபேர் கலந்துகொண்டார்கள் என்பது முக்கியமல்ல. எத்தனைபேர் தற்கொலை செய்துகொண்டு மாண்டிருக்கிறார்கள்? நேற்றுவரை தனுஷுடன் சேர்த்து 15 பேர் மாண்டிருக்கிறார்கள். இதையெல்லாம் மனதில் வைத்துதான் இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்கிறோம். ஆகவே, அவர்களுடைய தியாகம் வீண்போகக்கூடாது என்பதுதான் இந்த அரசினுடைய இலட்சியம். எனவே, அதற்கேற்ற வகையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள் தமது எண்ணத்தை வெளிப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பாரதிய ஜனதா கட்சி சட்டமன்ற உறுப்பினர், இந்தச் சபையில் நீங்கள் உங்கள் கட்சியின் தலைவராக இருக்கின்றீர்கள். தமிழ்நாடு நலன் கருதி, மாணவர்கள் நலன் கருதி நல்ல முடிவு சொல்லுங்கள். (குறுக்கீடு) ஒன்றும் தவறில்லை.*

திரு. நயினார் நாகேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்த இந்த சட்டமுன்வடிவை பாரதிய ஜனதா கட்சி எதிர்த்து, நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.*

[*2021 செப்டம்பர் 13*

(பாரதிய ஜனதா கட்சி உறுப்பினர்கள் அனைவரும் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன், ஒரு வரியில் சொல்லுங்கள்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *12* இலட்சம் மாணவ–மாணவிகள் தேர்வு எழுதுகிறார்கள். அவ்வளவுபேருக்கும் எதிராகச் செல்கிறீர்கள்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமன்றத்தில் சட்டம் இயற்றினால் அது செல்லுபடியாகுமா? வழக்கறிஞர் பெருமக்கள் எல்லாம் எதிர்ப்பு தெரிவித்திருக்கிறார்களே என்று மாண்புமிகு பிரதான எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்திருக்கிறார். இதே சட்டமன்றத்தில் அவர்கள் கட்சியின் சார்பாக ஜல்லிக்கட்டுக்கு தி.மு.க. கட்சியின் ஆதரவோடு நிறைவேற்றிய. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், போதும்.

திரு. தி. வேல்முருகன்: அந்தத் தீர்மானத்தை நாடாளுமன்றம் ஏற்றுக்கொண்டிருக்கிறது. (குறுக்கீடு) அதேமாதிரியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்த சட்டத்தை . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர், இந்தச் சட்டத்தை pass பண்ணிவிடலாம். போதும் (குறுக்கீடு) நிறைய பேசியாகிவிட்டது, போதும். (குறுக்கீடு) நிறைய பேசியாகிவிட்டது, போதும். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி, ஒரு வார்த்தை சொல்லுங்கள். (குறுக்கீடு) திரு. ஜி.கே. மணி, ஒரு வார்த்தை போதும். (குறுக்கீடு) திரு. ஜி.கே. மணி, இறுதியாக ஒரு வார்த்தை சொல்லுங்கள், போதும்.

பிற்பகல் 2–25

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், பேச வாய்ப்பு கொடுக்கிறீர்கள். இது ஒரு முக்கியமான தீர்மானம்.

2021 செப்டம்பர் 13] [திரு. ஜி.கே. மணி]

கட்சி வரிசைப்படி பேச வாய்ப்பு கொடுங்கள். இல்லையென்றால் கீழேயிருந்து கொடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் கையை உயர்த்தியிருந்தால் வாய்ப்பு தந்திருப்பேன். நீங்கள் கையை உயர்த்தவில்லை. இப்போதுதான் கையை உயர்த்தினீர்கள்.*

திரு. ஜி.கே. மணி: *நான் முன்பே கையை உயர்த்தினேன், நீங்கள் பார்க்கவில்லை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, அது காலையில். அப்போது நான் வாய்ப்புத் தந்துவிட்டேன்.*

திரு. ஜி.கே. மணி: *நெல்லையினுடைய பாசத்திற்குப் போய்விட்டீர்கள்; என்னை விட்டுவிட்டீர்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நீட் தேர்வு குறித்த சட்டமுன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி, அதனை வரவேற்கிறேன் அல்லது எதிர்க்கிறேன் என்று ஒரு வரியில் சொல்லுங்கள்.*

திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வு குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற சட்டமுன்வடிவு தமிழ்நாட்டிற்கு மிக மிக முக்கியம் என்ற காரணத்தால், இதை பாட்டாளி மக்கள் கட்சி மனதார வரவேற்கிறது, நன்றி தெரிவிக்கிறது. அதற்குக் காரணம். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், போதும், போதும். மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. சிந்தனை செல்வன், இச்சட்டமுன்வடிவை வரவேற்கிறேன் அல்லது எதிர்க்கிறேன் என்று ஒரு வரியில் சொல்லுங்கள். (குறுக்கீடு) திரு. சிந்தனை செல்வன், ஒரு வரியில் சொல்லுங்கள். பேசுங்கள் திரு. சிந்தனை செல்வன். (குறுக்கீடு) நேரமாகிவிட்டது. இல்லையெனில் நிறைய பேசலாம்.*

திரு. ம. சிந்தனை செல்வன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆகஸ்ட் 15 ஆம் தேதி, . . .*

[*2021 செப்டம்பர் 13*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், ரொம்ப பழைய விஷயத்தைப் பற்றி பேச வேண்டாம். தற்போதைய விஷயத்தைப் பற்றி பேசுங்கள்.*

திரு. ம. சிந்தனை செல்வன்: *நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், ஆகஸ்ட் 15 ஆம் தேதி கொடியேற்றியபோது, தேசியக் கொடி பட்டொளி வீசி வானை நோக்கி உயர்ந்தது. இன்று 10 கோடி தமிழர்களின் தன்மானம், (மேசையைத் தட்டும் ஒலி) மாநில சுயாட்சி உரிமைக்கான கனவு, (மேசையைத் தட்டும் ஒலி) உயர்ந்து பட்டொளி வீசிப் பறக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அனிதாவின் அந்தக் கடைசி நிகழ்வில் கலந்துகொண்டு, கண்ணீரோடு திரும்பியவர்களில் நானும் ஒருவன் என்கிற அடிப்படையில், எழுச்சித் தமிழர்களின் சார்பில், விடுதலை சிறுத்தைகள் கட்சி சார்பில், நெஞ்சார, நெஞ்சார, நெஞ்சார இந்தச் சட்டமுன்வடிவை வரவேற்று, ஆதரித்து, அமைகிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி அவர்கள், வரவேற்று, நன்றி சொல்லுங்கள்.*

திரு. வி.பி. நாகைமாலி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டு மக்கள் நலன் கருதி, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் நீட் தேர்வு குறித்து கொண்டு வந்திருக்கிற இந்தச் சட்டமுன்வடிவை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் உளமார வரவேற்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நன்றி. மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன் அவர்கள்.*

திரு. ட்டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நீதியை நிலைநாட்டும் வகையில், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற நீட் தேர்வுக்கான மசோதாவை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் மனப்பூர்வமாக வரவேற்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் தி. சதன் திருமலைக்குமார் அவர்கள்.*

டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழை, எளிய வீட்டுப் பிள்ளைகள் மருத்துவக் கல்வி பெறுவதற்காக, அவர்களின் சமூக நீதியை*

2021 செப்டம்பர் 13] [டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்]

நிலைநாட்டுவதற்காக, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் கொண்டு வந்த நீட் சம்பந்தப்பட்ட இந்தச் சட்டமுன்வடிவிற்கு மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நான் ஆதரவு தெரிவித்து, பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயிர்க்கொல்லியாக மாறக்கூடிய நீட் தேர்வு தமிழகத்திற்குத் தேவையில்லை என்பதை நிலைநாட்டக்கூடிய வகையில், சமூக நீதியை நிலைநாட்டக்கூடிய வகையில், மாநிலங்களுடைய உரிமைகளை நிலைநாட்டக்கூடிய வகையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்தச் சட்டமுன்வடிவை முழுமையாக வழிமொழிந்து மனித நேய மக்கள் கட்சியின் சார்பாக வரவேற்று அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள்.

திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீட் தேர்வு நடைபெற ஆரம்பித்த பிறகு, பல இலட்சம் ரூபாய் செலவு செய்கின்ற மாணவர்கள்தான் அதில் அதிக மதிப்பெண் பெற முடிகின்றது. இது மிகப் பெரிய தொழிலாக தமிழகத்திலே மாறியிருக்கிறது. அதற்கெல்லாம் முற்றுப்புள்ளி வைக்கின்ற வகையிலே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தச் சட்டமுன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதை வரவேற்கின்றோம், நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ஜெகன் மூர்த்தி அவர்கள்.

திரு. மு. ஜெகன் மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற நீட் தேர்வு பற்றிய மசோதாவை புரட்சி பாரதம் ஆதரிக்கின்றது, நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நன்றி. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

[*2021 செப்டம்பர் 13*

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே பா.ஜ.க. தவிர்த்து, அனைத்து சட்டமன்றக் கட்சிகளினுடைய தலைவர்கள் இந்தச் சட்டமுன்வடிவை வழிமொழிந்திருக்கிறார்கள், வரவேற்றிருக்கிறார்கள். அறிமுக நிலையிலேயே, இந்தச் சட்டமுன்வடிவு கொண்டுவரப்பட்டதன் முக்கியத்துவத்தைக் குறிப்பிட்டு நான் பேசியிருக்கிறேன். எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இந்தச் சட்டமுன்வடிவை ஒருமனதாக ஏற்று, நிறைவேற்றித் தர வேண்டுமெனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவுகள் 2 முதல் 14 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 14 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

2021 செப்டம்பர் 13] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 2–30

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு இளநிலை மருத்துவப் படிப்புகளுக்கான சேர்க்கைச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 43/2021) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

(ஔ) தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2021

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 32/2021), மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.